தினகனி

செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253


நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 121 | 4 Pages | 29.11.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 121 | 4 பக்கங்கள் | 29.11.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**உயிருடம்பின் நீக்கியா ரென்ப செயிருடம்பின்**
**செல்லாத்தீ வாழ்க்கை யவர்**

**விளக்கம்:**
நோய் மிகுந்த உடம்புடன் வறுமையான தீய வாழ்க்கை உடையவர், முன்பு கொலை பல செய்து உயிர்களை உடம்புகளில் இருந்து நீக்கினவர் என்று அறிஞர் கூறுவர்.

# இலங்கையில் கனமழை, வெள்ளம்: 12 பேர் பலி 3 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிப்பு



கொழும்பு, நவ.29

தென் மேற்கு வங்கக்கடலில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நிலவி வருகிறது. இது நாளை காலைக்குள் புயலாக உருவெடுக்க உள்ளது. இந்தபுயலுக்கு 'பெங்கல்' என பெயரிடப்பட்டுள்ளது. இந்த நிலையில், ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக இலங்கையில் கனமழை வெளுத்து வாங்கி வருகிறது. தொடர் கனமழையால் அந்நாட்டில் உள்ள பல்வேறு ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக அந்நாட்டின் கிழக்கு கடலோர பகுதிகளில் கனமழை வெளுத்து வாங்கி வருகிறது.

நாட்டில் கனமழை, வெள்ள பாதிப்புக்கு இதுவரை 12 பேர் உயிரிழந்துள்ளனர். இறந்தவர்களில் 8 பேர் அம்பாறை கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். மேலும், 3 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் பாதுகாப்பான இடங்களிலும், நிவாரண முகாம்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கனமழை, வெள்ளதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ராணுவத்தினரை அனுப்ப அதிபர் திசநாயக உத்தரவிட்டுள்ளார்.

வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் (அதிக கனமழையை ஏற்படுத்தும் அமைப்பு) காரணமாக இந்த சீரற்ற காலநிலை ஏற்பட்டுள்ளது என்றும், இது கிழக்கு மாகாணத்தை அதிகம் பாதித்துள்ளதாகவும் அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# இந்தோனேசியாவில் மழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் 7 பேர் பலி



ஜகார்த்தா, நவ.29

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக வடக்கு சுமத்ரா மாகாணத்தில் உள்ள மேடான் நகரத்திலிருந்து பெரஸ்டாகி நகருக்கு செல்லும் சாலையில் நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் சுற்றுலா பஸ் மீது மரங்கள், மண் மற்றும் பாறைகள் மூடப்பட்டன. இதில் பஸ்சில் இருந்த டிரைவர் உள்பட 7 பேர் உயிரிழந்தனர். மேலும் 10க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இதையடுத்து உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த மீட்புப்படையினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு மேடான் நகரில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

வடக்கு சுமத்ரா பிராந்திய காவல்துறையின் போக்குவரத்து இயக்குனர் முஜி எடியன்டோ கூறுகையில், இந்தோனேசியாவின் சாலையில் நிலச்சரிவு ஏற்பட்ட இடங்களுக்கு இடையில் சில வாகனங்களில் மக்கள் சிக்கியிருப்பதாகவும், அவர்களை அங்கிருந்து வெளியேற்ற குறைந்தது 2 நாட்கள் ஆகும் என்றார்.

இந்த வார தொடக்கத்தில், வடக்கு சுமத்ரா மாகாணத்தின் மலைப்பகுதிகளில் நான்கு இடங்களில் திடீர் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் 20 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வங்காளதேசத்தில் 'இஸ்கான்' அமைப்பை தடை செய்ய கோர்ட்டு மறுப்பு



டாக்கா, நவ.29

வங்காளதேசத்தின்தேசிய கொடியை அவமதித்ததாக எழுந்த புகாரின் அடிப்படையில், அந்நாட்டைச் சேர்ந்த இந்து மத அமைப்பின் தலைவர்சின்மய் கிருஷ்ண தாஸ் அண்மையில் கைது செய்யப்பட்டார். அவர் மீதான கைது நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, வங்காளதேசத்தில் உள்ள இந்து அமைப்பைச் சேர்ந்தவர்கள் போராட்டம் நடத்தினர்.

இந்தநிலையில், வங்காளதேசத்தில் 'இஸ்கான்'(ISKCON)அமைப்பின் செயல்பாடுகளுக்கு அரசு தடை விதிக்க வேண்டும் எனவும், அங்குள்ள சத்தோகிரம், ராங்பூர் மற்றும் தினஜ்பூர் ஆகிய பகுதிகளில் 144 தடை உத்தரவை அமல்படுத்த வேண்டும் என்றும் கோரி டாக்காஐகோர்ட்டில் வழக்கறிஞர் மொனிருதீன் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு நீதிபதி பராஹ் மஹ்பூப், நீதிபதி டெபாசிஷ் ராய் சவுத்ரி ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், வங்காளதேசத்தில் 'இஸ்கான்' அமைப்பிற்கு தடை விதிக்க மறுப்பு தெரிவித்தனர். அதே சமயம், வங்காளதேசத்தில் சட்ட ஒழுங்கை பாதுகாப்பதில் அரசு கவனமாக இருக்க வேண்டும் எனவும் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

# திராவிட மாடல் அரசின் காலம்தான் தமிழக காவல் துறையின் பொற்காலம்: முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, நவ.29

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் உள்துறை சார்பில் நடை பெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்மூலமாக இரண்டாம்நிலை காவலர்கள், சிறைத்துறை காவலர்கள் மற்றும் தீயணைப் பாளர்கள் ஆகிய பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 3359 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 1000 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளைவழங்கினார். அப்போது அவர் பேசியதாவது:




நம்முடைய திராவிட மாடல் அரசை பொறுத்த வரைக்கும், காவலர்களை போற்றும் அரசாக, காவல் துறையில் இருப்பவர்களுக்கு பல நலத்திட்டங்களை நிறைவேற்றித் தரும் அரசாக, மக்களைக் காப்பாற்றும் அரசாக அமைந்து இருக்கிறது.

அதனால்தான், இந்தியாவிலேயே ஏன், உலக அளவிலேயே ஸ்காட்லாந்து யார்டுக்கு இணையான காவல்துறையாக, தமிழ்நாடு காவல் துறை விளங்கிக் கொண்டிருக்கிறது, அதை யாரும் மறுக்கமுடியாது.

முதன் முதலாக காவல் ஆணையம் அமைத்ததுடன், பல்வேறு முன்னோடி நலத் திட்டங்களை நிறைவேற்றியது திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்.

கடந்த மூன்று ஆண்டுகளில் காவலர்கள் முதல் டி.எஸ்.பி., வரை 17 ஆயிரத்து 435 நபர்களை காவல்துறையிலும், ஆயி ரத்து 252 பேரை தீய ணைப்புத் துறையிலும், 366 பேரை சிறைத்துறையிலும் புதிதாக நியமித்திருக்கிறோம்.

திராவிட மாடல் அரசின் காலம் தான், தமிழ்நாடு காவல்துறையின் பொற்காலமாக அமைந்திருக்கிறது. நீங்கள் மக்களுடைய கஷ்டங்களை தீர்க்க பாடுபட வேண்டும்.

புதிதாக தமிழ்நாடு காவல்துறையில் இணைந்திருக்கும், உங்க ளுக்கு ஏராளமான கடமை கள் காத்திருக்கிறது. சட்டம்ஒழுங்கை பாதுகாப்பதுடன் குற்றங்களே நடைபெறாமல் தடுப்பது தான் நம்முடைய இலக்காக இருக்கவேண்டும்.

சைபர் குற்றங்கள், போதைப் பொருள் ஒழிப்பு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள்! இந்த சவால்களை எதிர்கொள்ள உங்களை நீங்கள் தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.

உங்களுக்கு, சமூகநீதிப் பார்வையும் மதச்சார் பின்மையும் நிச்சயம் முக்கியம். சாதி பாகுபாடு பார்க்கக் கூடாது. அனைவருக்கும் பொதுவான நிலையில் இருந்து நீங்கள் பணியாற்றவேண்டும்! உங்களுக்கு சட்டம்தான் முக்கியம்.

பிரச்சினை என்று உங்களிடம் புகார் கொடுக்க வரும் பொதுமக்களிடம் கனிவாக பேசுங்கள். உங்களின் பேச்சும், நீங்கள் நடந்துக் கொள்வதிலும் தான், நம்முடைய பிரச்சினை தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு உருவாக்கும்.


புதிதாக பணியில் சேரும் உங்களுக்கு, நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, குற்றங்கள் குறைந்துவிட்டது என்று சொல்வது சாதனை இல்லை; குற்றங்களே இல்லை என்று சொல்வது தான் சாதனை.

குற்றவாளிகளை கண்டு பிடித்துவிட்டோம் என்று சொல்லிக்கொள்வது சாதனை இல்லை; குற்றங்கள் நடைபெறாமல் தடுத்துவிட்டோம் என்று சொல்வது தான் நம்முடைய சாதனையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் ரகுபதி, தலைமைச் செயலாளர் முருகானந்தம், உள்துறை செயலாளர் தீரஜ்குமார், டி.ஜி.பி. சங்கர் ஜிவால் கலந்து கொண்டனர்.

# கோடநாடு கொள்ளை வழக்கு: அ.தி.மு.க. நிர்வாகியிடம் விசாரணை



கோவை, நவ.29

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே கோடநாடு எஸ்டேட்டில் 24.4.2017ந் தேதி காவலாளி ஓம்பகதூர் கொலை செய்யப்பட்டார். மேலும் எஸ்டேட் பங்களாவில் இருந்த பொருட்கள் கொள்ளை அடிக்கப்பட்டது. இதுதொடர் பாகசயான், வாளையாறுமனோஜ், சந்தோஷ் சாமி, தீபு, சதீசன், உதய குமார், ஜித்தின் ஜாய், ஜம்சீர் அலி, மனோஜ் சாமி, குட்டி என்ற பிஜின் ஆகிய 10 பேரை கோத்தகிரி போலீசார் கைது செய்தனர்.

இந்த வழக்கில் தொடர்புடைய முக்கிய குற்றவாளியான டிரைவர் கனகராஜ் சாலை விபத்தில் உயிரிழந்தார். இந்த வழக்கு விசாரணை நீலகிரி மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இதையடுத்து தி.மு.க. ஆட்சிக்குவந்தபின்னர்மேற்குமண்டல ஐ.ஜி. தலைமையில் 5 தனிப்படைகள் அமைத்து விசாரணை துரிதப் படுத்தப்பட்டது. தனிப்படை போலீசார் 316 பேரிடம் மறுவிசாரணை நடத்தினர்.

இதைத்தொடர்ந்து கோடநாடு வழக்கு சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்றப்பட்டது. கோவை சி.பி.சி.ஐ.டி. கூடுதல் துணை கமிஷனர், விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டு, தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது. இதில் பல்வேறு கட்டங்களாக வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு சம்மன் அனுப்பி சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில் அ.தி.மு.க. நிர்வாகி சஜீவன், தனக்கு அனுப்பிய சம்மனை ஏற்று காந்திபுரம் சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தில் இன்று விசாரணைக்கு ஆஜரானார்.

அ.தி.மு.க. வர்த்தகர் அணி மாநில செயலாளராக இருப்பவர் சஜீவன். இவர் ஜெயலலிதா உயிருடன் இருந்தபோது கோடநாடு பங்களாவில் மர வேலைகளை கவனித்து வந்தார். இந்த சூழலில் கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிக்குமாறு சஜீவன் கூறியதாக குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டிருந்தது. கோடநாடு வழக்கு விசாரணைக்காக கடந்த நவ.5ம் தேதி ஆஜராகுமாறு சஜீவனுக்கு சம்மன் தரப்பட்ட நிலையில், துபாய் சென்றதால் தற்போது அவர் ஆஜராகி உள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதல்அமைச்சரின் திறனாய்வு தேர்வு: ஜனவரி 25ம் தேதி நடைபெறும் அரசு தேர்வுகள் துறை அறிவிப்பு

சென்னை, நவ.29

அரசு பள்ளிகளில் 10ம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கான முதல்அமைச்சரின் திறனாய்வு தேர்வு வரும் ஜனவரி 25ம் தேதி நடைபெறும் என்று அரசு தேர்வுகள் துறை அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

அரசுப் பள்ளிகளில் 20242025ம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணாக்கர்ளுக்கான "தமிழ்நாடு முதல்அமைச்சரின் திறனாய்வுத் தேர்வு 25.01.2025 (சனிக்கிழமை) அன்று நடைபெற உள்ளது.



தமிழ்நாடு மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ் 20242025ம் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணாக்கர்கள் இத்தேர்விற்கு விண்ணப்பிக்கலாம். இத்தேர்வில் நடைமுறையில் உள்ள இடஒதுக்கீட்டின் அடிப்படையில் 1,000 மாணாக்கர்கள் (500மாணவர்கள் + 500 மாணவியர்கள்) தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு உதவித் தொகையாக ஒரு கல்வியாண்டில் ரூ.10,000/ (ஒரு மாதத்திற்கு ரூ.1000/ என) வழங்கப்படும்.

தமிழ்நாடு அரசின் 9 மற்றும் 10ம் வகுப்புகளில் கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் பாடப் புத்தகத்தில் உள்ள பாடத்திட்டங்களின் அடிப்படையில் கொள்குறிவகையில் தேர்வு இருதாள்களாக நடத்தப்பெறும். முதல் தாளில் கணிதம் தொடர்புடைய வினாக்கள் 60 இடம் பெறும். இரண்டாம் தாளில் அறிவியல் மற்றும் சமூக அறிவியல் தொடர்புடைய வினாக்கள் 60 இடம் பெறும். முதல் தாள் காலை 10 மணி முதல் 12 மணி வரையிலும், இரண்டாம் தாள் பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரையிலும் நடைபெறும்.

மாணவர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பப்படிவத்தினை 30.11.2024 முதல் 09.12.2024 வரை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் தேர்வுக் கட்டணம் ரூ.50/ (ரூபாய் ஐம்பது மட்டும்) சேர்த்து 09.12.2024க்குள் மாணவர்கள் பயிலும் பள்ளித் தலைமையாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மெரினாவை தொடர்ந்து புதுவண்ணாரப்பேட்டை கடற்பகுதியில் கரை ஒதுங்கிய மிதவை

சென்னை, நவ.29

தென்மேற்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வடக்கு மற்றும் வடமேற்கு நோக்கி நகர்ந்து வருகிறது.

இது அடுத்த 6 மணி நேரத்தில் (மாலை 5.30) மணிக்கு வடக்கு வடமேற்கில் நகர்ந்து சூறாவளி புயலாக (ஃபெங்கல் புயல்) வலுப்பெறும் என இந்திய வானிலை ஆய்வும் மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக தமிழக கடலோர மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது.





ஃபெங்கல் புயல் காரணமாக சென்னையில் கடல் சீற்றத்துடன் காணப்படுகிறது. குறிப்பாக எண்ணூர், திருவெற்றியூர், காசிமேடு ஆகிய பகுதியில் கடல் சீற்றத்துடன் காணப்படுகிறது.

இதனால் கடலில் ஆழம் குறித்தும் பாறைகள் இருக்கும் இடத்தை முன்கூட்டி கண்டறிய பொறுத்தப்படும் மிதவை கருவி ஒன்று மெரினா கடற்கரையில் ஒதுங்கியுள்ளது. அதனை தொடர்ந்து புதுவண்ணாரப்பேட்டையிலும் ஒரு மிதவை கருவி கரை ஒதுங்கி உள்ளது.

இதனை பொதுமக்கள் வியப்புடன் பார்த்து சென்றனர். மேலும் சில இளைஞர்கள் அந்த கருவியுடன் புகைப்படமும் எடுத்துக் கொண்டனர்.

# களஆய்வுனு கலவர ஆய்வு நடத்துறாங்க அ.தி.மு.க.வை சாடிய துணை முதல்வர் உதயநிதி

சென்னை, நவ.29

தமிழ்நாடு துணை முதலமைச்சரும், தி.மு.க. இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் இன்று தனது 47வது பிறந்த நாளை கொண்டாடினார். அவருக்கு கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், அரசியல் தலைவர்கள் என பலரும் பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தனர்.



இதையடுத்து இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து இருந்தார். இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று நலத்திட்ட உதவிகள் வழங்கிய பின் உதயநிதி ஸ்டாலின் பேசுகையில்,

அமைச்சர் சேகர் பாபு ஒவ்வொரு வருடமும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து வருகிறார். முதலமைச்சர் தலைமையில் கடந்த மூன்றரை வருடங்களாக சிறப்பான ஆட்சி நடத்தி வருகிறோம். சென்ற பாராளுமன்ற தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை மக்கள் நமக்கு தந்துள்ளார்கள். அதுவே மிகப்பெரிய சான்றிதழ். ஆனால் அதைவிட மிக மிக முக்கியம் வருகிற 2026 சட்டமன்ற தேர்தல் மிகமிக முக்கியம்னு தலைவர் சொல்லி இருக்கார். ஆணையிட்டுள்ளார். உறுதிமொழி கொடுத்து இருக்கார். 234 தொகுதிகளில் குறைந்தது 200 தொகுதி ஜெயிப்போம்னுங்கற உறுதி மொழி எனக்கு வேண்டும்.

எல்லோரும் எல்லாம் என்பது தான் திராவிட மாடல் ஆட்சி. அதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு இந்த நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சியை ஒரு திராவிட மாடல் நிகழ்ச்சின்னு சொல்லலாம். கழகத்தின் மூத்த முன்னோடிகள் 100 பேருக்கு பொற்கிழி, 250 கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவி தொகை, 375 விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் 500 பெண்கள் அடங்கிய மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு உதவி தொகை, 10 மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்கள் என இன்றைக்கு மட்டும் 1,335 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க அமைச்சர் சேகர்பாபு ஏற்பாடு செய்து இருக்கார்.

வருகிற சட்டமன்ற தேர்தலுக்கு நாம் தயார் ஆக வேண்டும். கழகத்தின் திட்டங்களை மக்களிடம் கொண்டு போய் சேர்க்கணும். திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் கொண்டு போய் சேர்த்து எப்போதும் சென்னை கிழக்கு மாவட்டம் நம் கழகத்தின் கோட்டை என்பதை நிச்சயம் ஜெயிக்கப்போவது உறுதி. கடந்த 3 நாட்களாக டெல்டா பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டேன். அரசு நிகழ்ச்சி, கழக நிகழ்ச்சி என்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன். மக்களிடம் அப்படி ஒரு எழுப்பி உள்ளது. குறிப்பாக தாய்மார்களிடம் அப்படி ஒரு எழுச்சி இருக்கு. நிச்சயம் இந்த முறை 7 முறையாக திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சி அமைக்கப் போவது உறுதி. கழகத் தலைவர் தொடர்ச்சியாக 2வது முறையாக முதல்வர் நாற்காலியில் தமிழ்நாட்டு மக்கள் உங்களோட ஒத்துழைப்பால உட்கார வைக்கப்போவது உறுதி.

எதிர் அணியில் இருக்கக் கூடிய கூட்டணியில் என்ன நடக்கிறது என்பது உங்களுக்கு தெரியும். அவர்கள் கள ஆய்வு நடத்துறோம்னு சொல்லி ஒவ்வொரு இடத்திலும் பெரிய கலவர ஆய்வுதான் நடத்துறாங்க. எல்லா நிகழ்ச்சியிலும் சண்டை. ஆனா நம்முடைய கூட்டணி.. மிகப்பெரிய ஒரு வெற்றி கூட்டணி.. சொல்லப்போனால் நம் எதிர் அணியில் இருக்கக்கூடிய அதிமுகவோட பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன் பொதுக்கூட்டத்தில் சொல்றாரு.. கூட்டணிக்கு வரச்சொன்னா ஒருத்தர் நூறு கோடி கேட்கறான். மற்றொருத்தன் 20 தொகுதி கேட்கறான்னு ஓபனா பேச ஆரம்பிச்சிட்டாங்க..

ஆனா நம்ம கூட்டணி வெற்றி கூட்டணி. நம்ம தலைவர் கழகத்தின் தலைவரா பொறுப்பேற்று சந்தித்த தேர்தலில் வெற்றி பெற்றுள்ளோம். அதற்கு ஒரு விஷயம் தான். கழகத்தோழர்கள்...கலைஞரின் உடன்பிறப்புகள் என அனைவரும் களத்தில் இறங்கி பிரசாரத்தில் ஈடுபட்டு வெற்றியை உறுதி செய்யணும்.


இவ்வாறு அவர் பேசினார்.

# மரக்காணம் அருகே வெள்ளத்தில் மூழ்கிய பக்கிங்காம் கால்வாய் பாலம்: போக்குவரத்து பாதிப்பு

மரக்காணம், நவ.29

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் பகுதிகளில் 19 மீனவ கிராமங்கள் 2வது நாளாக கடலுக்கு செல்லவில்லை. தற்போது மரக்காணம் பகுதிகளில் விவசாய நிலங்களின் மணிலா நெல்லு, மரவள்ளிக்கிழங்கு விவசாய நிலங்களில் பயிரிட்டு உள்ளார்கள். அது தற்போது மழையினால் மூழ்கியது.

கந்தாடு வண்டிப்பாளையம் கிளாப்பக்கம், ஓமிப்பேர், நாமக்கல் மேடுகாயல், மேலே எடசேரி, உப்பு வேலூர், கீழ் பெட்டை, அனுமந்தை, கூனிமேடு, மண்டபாய்,



ஆலப்பாக்கம் கலியங்குப்பம், செய்யாங்குப்பம் போன்ற கிராமங்களில் 100 ஏக்கருக்கு மேல் சம்பா நெல் சாகுபடி செய்தது மழை தண்ணீரில் மூழ்கியது.

அதுபோல், பக்கிங்காம் கால்வாயில் மழைநீர் செல்வதால் வண்டிப்பாளையம் ஆதிகுப்பம் பகுதியில் தண்ணீர் செல்வதால் 15க்கும் மேற்பட்ட கிராமங்களில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் 25 கிலோமீட்டர் சுற்றி புதுவைக்கு செல்லும் அவல நிலை உள்ளது.

தற்போது மரக்காணம் பகுதிகளின் தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் ஏரி குளம் குட்டைகள் தண்ணீரில் நிரம்பி வருகின்றன. விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# டிசம்பர்5ந் தேதி நினைவு நாள்: ஜெயலலிதா நினைவிடத்தில் எடப்பாடி பழனிசாமி மரியாதை

சென்னை, நவ.29

அ.தி.மு.க. தலைமை கழகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

ஜெயலலிதாவின் 8ம் ஆண்டு நினைவு நாளான டிசம்பர் 5ந்தேதி காலை 10 மணியளவில் சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள நினைவிடத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி



மலர் வளையம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்த உள்ளார்.

அதனையடுத்து எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரது நினைவிட நுழைவு வாயில் உட்புறத்தில் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது. கழக உடன்பிறப்புகளும், பொதுமக்களும் கலந்துகொண்டு மரியாதை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஊட்டியில் ஜனாதிபதி திரவுபதி முர்மு மேகமூட்டம் காரணமாக கோவையில் இருந்து காரில் சென்றார்

ஊட்டி, நவ.29

ஜனாதிபதி திரவுபதி முர்மு 4 நாள் பயணமாக இன்று தமிழகம் வருகை தந்தார். இன்று காலை டெல்லியில் இருந்து விமானம் மூலம் புறப்பட்ட ஜனாதிபதி, கோவை விமான நிலையம் வந்தார். கோவை மாவட்ட கலெக்டர் கிராந்திகுமார்பாடி மற்றும் அதிகாரிகள் அவரை வரவேற்றனர். பின்னர் அங்கிருந்து கார் மூலம் நீலகிரி மாவட்டம் புறப்பட்டுச் சென்றார்.



விமான நிலையத்தில் இருந்து அன்னூர், மேட்டுப்பாளையம், கோத்தகிரி வழியாக காரில் ஊட்டி ராஜ்பவனுக்கு சென்றார். அங்கு ஜனாதிபதியை தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி, மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு, மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு நிஷா ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர். இன்று ஜனாதிபதி ராஜ்பவன் மாளிகையில் தங்கி ஓய்வெடுக்கிறார்.

நாளை காலை ஜனாதிபதி திரவுபதி முர்மு, குன்னூர் வெலிங்டனில் ராணுவ பயிற்சி கல்லூரிக்கு செல்கிறார். அங்கு அவருக்கு வரவேற்பு மற்றும் ராணுவ மரியாதை அளிக்கப்பட உள்ளது.

பின்னர் அவர் போரில் உயிர்நீத்த வீரர்களுக்காக வைக்கப்பட்டுள்ள நினைவு சின்னத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்துகிறார். அதனை தொடர்ந்து அங்கு நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்கும் அவர், பயிற்சி அதிகாரிகள் மத்தியில் உரையாற்றுகிறார்.

இன்று (வெள்ளிக்கிழமை) ஊட்டி ராஜ்பவனில் நீலகிரி பழங்குடியின மக்கள் மற்றும் படுகர் இன மக்களை சந்திக்க உள்ளார். அதற்கான ஏற்பாடுகளும் நடந்து வருகிறது.

நீலகிரியில் நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு 30ந்தேதி (சனிக்கிழமை) கோவை வரும் ஜனாதிபதி திரவுபதி முர்மு விமானம் மூலம் திருச்சி செல்கிறார். அங்கிருந்து திருவாரூர் சென்று, மத்திய பல்கலைக்கழகத்தில் நடக்கும் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று பட்டங்களை வழங்குகிறார். அதனை தொடர்ந்து மீண்டும் திருச்சி விமான நிலையம் வந்து, அங்கிருந்து டெல்லிக்கு செல்ல உள்ளார்.

ஜனாதிபதி ஊட்டி வருகையை முன்னிட்டு நீலகிரியில் போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. கூடுதல் டி.ஜி.பி. டேவிட்சன் தேவாசீர்வாதம் தலைமையில் மேற்கு மண்டல ஐ.ஜி.செந்தில்குமார், நீலகிரி போலீஸ் சூப்பிரண்டு நிஷா ஆகியோர் மேற்பார்வையில் 1000 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். ராஜ்பவன், ராஜ்பவனில் இருந்து குன்னூர் செல்லும் சாலை உள்ளிட்ட பகுதிகள் ராணுவம் மற்றும் போலீசாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. முக்கிய இடங்களில் துப்பாக்கி ஏந்திய போலீசும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

இதுதவிர மாவட்டத்தில் உள்ள சோதனை சாவடிகள் மற்றும் தங்கும் விடுதிகளும் சோதனை தீவிரப்படுத்தப்பட்டது. சந்தேகத்திற்கு இடமாக யாராவது இருந்தால் தகவல் கொடுக்கவும் போலீசார் விடுதி உரிமையாளர்களை அறிவுறுத்தி சென்றனர். ஜனாதிபதி வருகையை முன்னிட்டு நீலகிரியில் 6 நாட்கள் டிரோன்கள் பறக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே ஜனாதிபதி வருகையையொட்டி நேற்று ஊட்டி ராஜ்பவனில் இருந்து ராணுவ பயிற்சி கல்லூரி மற்றும், கோவையில் இருந்து கோத்தகிரி வழியாக ஊட்டி செல்லும் சாலையிலும் பாதுகாப்பு வாகனங்கள் அணிவகுப்பு ஒத்திகை நடைபெற்றது.

முன்னதாக கோவையில் இருந்து ஊட்டிக்கு ஜனாதிபதி ஹெலிகாப்டரில் பயணிப்பதாக இருந்தது. ஆனால் கடந்த சில தினங்களாகவே கோவை, நீலகிரியில் கடும் மேகமூட்டம் நிலவி வந்தது. இன்று காலையும் மேகமூட்டம் அதிகமாக காணப்பட்டது. இதனை தொடர்ந்து ஹெலிகாப்டர் பயணம் ரத்து செய்யப்பட்டு, ஜனாதிபதி காரில் சாலை மார்க்கமாக ஊட்டிக்கு பயணமானார்.

# சென்னையில் புயலை எதிர்கொள்ள 18 ஆயிரம் போலீசார் உஷார் 35 கட்டுப்பாட்டு மையங்கள் அமைப்பு

சென்னை, நவ.29

சென்னையில் புயலை எதிர்கொள்ள போலீசார் தயார் நிலையில் உள்ளனர்.

போலீஸ் கமிஷனர் அருண் உத்தரவின் பேரில் சென்னை மாநகரம் முழுவதும் 12 பேரிடர் மீட்பு படையினர் புயல் பாதிப்பில் இருந்து மக்களை பாதுகாப்பதற்காக உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.



சென்னையில் உள்ள 12 போலீஸ் துணை கமிஷனர் அலுவலகங்களுக்கும் ஒரு பேரிடர் மீட்பு படையினர் செயலாற்றும் வகையில் 12 மீட்பு குழுவினர் ஏற்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த மீட்பு குழுவில் புயல் பாதிப்பை முழுமையாக எதிர்கொள்ளும் வகையில் நன்கு பயிற்சி பெற்ற போலீசார் இடம் பெற்றுள்ளனர்.

புயல் பாதிப்பின்போது மரங்கள் சாய்ந்து விழுந்தால் உடனடியாக வெட்டி அப்புறப்படுத்தும் வகையில் இந்த குழுவினரிடம் மரம் அகற்றும் எந்திரங்களும் உள்ளன.

பாதிப்பு ஏற்படும் இடங்களுக்கு உடனடியாக சென்று இந்த மீட்பு படையினர் மரங்களை வெட்டி அப்புறப்படுத்துவார்கள்.

அதேபோன்று சென்னை முழுவதும் 18 ஆயிரம் போலீசாரும் பொதுமக்களுக்கு தேவையான பொருட்கள் மற்றும் மீட்பு பணியில் ஈடுபட தயார் நிலையில் இருக்கிறார்கள்.

சென்னையில் 35 கட்டுப்பாட்டு மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த கட்டுப்பாட்டு மையங்களில் 24 மணி நேரமும் போலீசார் செயல்படும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதுதவிர கூடுதல் கமிஷனர்கள் கண்ணன், நரேந்திரன் நாயர் மற்றும் இணை கமிஷனர்கள் உள்ளிட்டோர் பாதுகாப்பு பணியில் ஈடுபட அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இது தவிர 800 தீயணைப்பு படை வீரர்களும் சென்னையில் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

# ராமதாஸ் குறித்த முதலமைச்சரின் கருத்து: சென்னையில் போராட்டத்தில் ஈடுபட்ட ஏராளமான பா.ம.க.வினர் கைது

சென்னை, நவ.29

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ், தமிழக அரசு மீது குற்றம் சாட்டி வெளியிட்ட அறிக்கை தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் நிருபர்கள் கேள்வி கேட்டனர். இதற்கு பதில் அளித்த அவர் வேறு வேலை இல்லாமல் டாக்டர் ராமதாஸ் அறிக்கை வெளியிடுவதாக கூறியிருந்தார்.

இதற்கு கண்டனம் தெரிவித்து பா.ம.க.வினர் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். சென்னை நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டம் அருகே பா.ம.க.வினர் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது பா.ம.க.வினரிடம் போலீசார் போராட்டத்துக்கு அனுமதி இல்லை என்று கூறி தடுத்து நிறுத்தினர். இதனால் போராட்டத்தில் ஈடுபட்ட பா.ம.க.வினருக்கும், போலீசாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட பா.ம.க.வினர் 97 பேரை போலீசார் கைது செய்தனர். இவர்களில் 7 பேர் பெண்கள் ஆவர். கைதான அனைவரும் அருகில் உள்ள மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அனைவரும் மாலையில் விடுவிக்கப்படுவார்கள் என போலீசார் தெரிவித்துள்ளனர்.

சென்னை ஐகோர்ட்டில் இன்று பா.ம.க. வக்கீல்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்தின் போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு எதிராக கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டன.

# ஓசூர் சானமாவு வனப்பகுதியில் 40 காட்டு யானைகள் தஞ்சம் வனத்துறையினர் எச்சரிக்கை

ஓசூர், நவ.29

கிருஷ்ணகிரி மாவட்டம். தேன்கனிக்கோட்டை அருகேயுள்ள ஊடேதுர்க்கம் காப்புக்காட்டில் இருந்து 40க்கும் மேற்பட்ட யானைகள், நேற்று நள்ளிரவு நாகமங்கலம் கிராமத்தை கடந்து சானமாவு வனப்பகுதிக்குள் புகுந்தன.

இந்த யானைக்கூட்டம், அருகிலுள்ள கிராமங்களில் புகுந்து விவசாய பயிர்களை சேதப்படுத்தும் அபாயம் உள்ளது.



எனவே, சானமாவு, சினிகிரிப்பள்ளி, அனுமந்தபுரம், டி.கொத்தப்பள்ளி, கொம்மேப்பள்ளி, பென்னிக்கல் மற்றும் சுற்றியுள்ள கிராம மக்கள், விவசாயிகள், மேய்ச்சலுக்காக கால்நடைகளை அழைத்து செல்பவர்கள் என அனைவரும் பாதுகாப்பாகவும், எச்சரிக்கையாக இருக்க வனத்துறையின் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 20க்கும் மேற்பட்ட வனத்துறை பணியாளர்கள் அந்த யானைகளின் நடமாட்டத்தை தீவிரமாக கண்காணித்து மீண்டும் அடர்ந்த வனப்பகுதிக்கு விரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# உதயநிதி பிறந்தநாள் மாணவர்களை நிற்கவைத்து வாழ்த்து சொல்ல வைத்த தி.மு.க. நிர்வாகிகள்



தென்காசி, நவ.29

தமிழ்நாடு துணை முதலமைச்சரும், தி.மு.க. இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் இன்று தனது 47வது பிறந்த நாளை கொண்டாடி வருகிறார். அவருக்கு கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், அரசியல் தலைவர்கள் என பலரும் பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், தனியார் பள்ளி மாணவ மாணவர்களை மைதானத்தில் நிற்க வைத்து ஹாப்பி பர்த்டே உதய் அண்ணா என்று தி.மு.க. நிர்வாகிகள் சொல்ல சொல்ல மாணவர்களும் சொல்கின்றனர். அப்போது மாணவர்கள் உதயநிதி ஸ்டாலினின் கட்சி சார்ந்த புகைப்படத்தை கையில் ஏந்தி நிற்கின்றனர். இது தொடர்பான வீடியோ காட்சிகள் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

இச்சம்பவம் தென்காசி மாவட்டம் ஐந்தருவி சாலையில் உள்ள தனியார் பள்ளியில் நடைபெற்று உள்ளது.

# ஈரோடு மாவட்டத்தில் இன்று ஒரு நாள் கடையடைப்பு



ஈரோடு, நவ.29

மத்திய அரசு கடை வாடகைக்கு 18 சதவீத ஜி.எஸ்.டி வரி விதிப்பை கடந்த அக்டோபர் மாதம் 10ந்தேதி முதல் அமலாக்கி உள்ளது. இந்த முறையால் வணிகர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதால், இந்த வரி விதிப்பு முறையை முழுமையாக நீக்கம் செய்யக் கோரி வருகிற 29ம் தேதி (வெள்ளிக்கிழமை) ஒரு நாள் கடையடைப்பு நடத்த அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் நடந்த நிர்வாகிகள் கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில் தலைவர் ராஜமாணிக்கம் தலைமை தாங்கினார்.

பொதுச்செயலாளர் ரவிசந்திரன், பொருளாளர் முருகானந்தம் முன்னிலை வகித்தனர். இதில் மத்திய அரசு கொண்டு வந்துள்ள வாடகைக்கு 18 சதவீத ஜி.எஸ்.டி வரி விதிப்பினை கண்டித்து வருகிற 29ந்தேதி ஈரோடு மாவட்டம் முழுவதிலும் ஒரு நாள் கடையடைப்பு, தொழில் நிறுவனங்கள் வேலை நிறுத்தம் செய்வது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஈரோடு கிளாத் மெர்ச்சன்ட்ஸ் அசோசியேசன் நிர்வாகிகள் கூறியதாவது:

அனைத்து வகை வாடகை கட்டடங்கள், கடைகளுக்கு, 18 சதவீத ஜி.எஸ்.டி என்பது வணிகர்களை கடுமையாக பாதிக்கும். ரூ.10 ஆயிரம் வாடகையில் கடை நடத்தும் வியாபாரி ரூ.1,800 செலுத்த வேண்டி வரும். பெரிய வியாபாரிகள், வணிகர்கள், ஜிஎஸ்டியை 'இன்புட்' என்ற ரீதியில் திரும்ப பெற இயலும்.

குறைந்த வர்த்தகத்தில் தொழில் செய்யும், 'கன்சல்டேட்டேட்' முறையில் ஜி.எஸ்.டி.யாக, 1 சதவீதம் செலுத்தும் வணிகர்கள், 18 சதவீத ஜி.எஸ்.டி தொகையை திரும்ப பெற இயலாது. தவிர மிக மிக குறைந்த அளவிலும், பில் இன்றி பரிமாற்றம் செய்யப்படும் வணிகத்தில் உள்ளோரும் கடுமையாக பாதிப்பார்கள்.

எனவே 18 சதவீத ஜி.எஸ்.டி.யை வணிகர்களுக்கு முழுமையாக நீக்க கோரி வருகிற 29ந் தேதி ஒரு நாள் கடையடைப்பு போராட்டத்தை ஈரோடு கிளாத் மெர்ச்சன்ட்ஸ் அசோசியேசன் மற்றும் இதனுடன் இணைந்த அமைப்புகளும் நடத்துகிறது. ஈரோடு பகுதியில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடைகள், குடோன்கள் கடையடைப்பில் பங்கேற்பார்கள். இவ்வாறு அவர்கள் கூறினர்.

இந்த போராட்டத்திற்கு ஈரோடு நகை வியாபாரிகள் சங்கத்தினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். மேலும் பல்வேறு சங்கத்தினரும் அமைப்பினரும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

# சமூகநீதியை நுழையவிட மறுக்கும் தமிழ்நாடு பெருந்தகை வி.பி.சிங்கின் ஆன்மா மன்னிக்காது: ராமதாஸ் கண்டனம்



சென்னை, நவ.29

பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

தெலுங்கானாவில் கடந்த 6ஆம் நாள் தொடங்கிய சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு கடந்த 20 நாட்களில் 92% நிறைவடைந்து விட்டதாக அம்மாநில முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி கூறியிருக்கிறார். தெலுங்கானா மாநிலத்தில் சமூகநீதியைக் காப்பதில் அம்மாநில காங்கிரஸ் அரசு காட்டும் அக்கறை வரவேற்கத்தக்கது.

தெலுங்கானா மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் சாதிவாரி கணக்கெடுப்புப் பணிகள் அடுத்த ஒரு வாரத்தில் முடிவடைந்து விடும். திசம்பர் 9ஆம் நாள் அதன் அறிக்கை அம்மாநில அரசிடம் தாக்கல் செய்யப்படவுள்ளது. அதனடிப்படையில் அனைத்து சமூகங்களுக்கும் முழுமையான சமூக நீதி வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி கூறியிருக்கிறார். தெலுங்கானாவில் மேற்கொள்ளப்பட்ட சாதிவாரி கணக்கெடுப்பு சமூகநீதி நிர்வாகத்தில் வரலாற்றுச் சாதனை என்றும், மாநிலங்களில் சமூகநீதி வழங்க இது அவசியம் என்றும் காங்கிரஸ் தலைவர் இராகுல் காந்தி கூறியிருக்கிறார்.

தெலுங்கானாவில் பிறபிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்கள்தொகை வெறும் 52% மட்டும் தான். ஆனால், அவர்களுக்காக சமூகநீதியை வழங்க வேண்டும் என்பதற்காக அம்மாநில அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் வியக்க வைக்கின்றன. சமூகநீதியில் தெலுங்கானா வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது.

லெுங்கானாவுக்கு மிக அருகில் தான் தமிழ்நாடு என்ற மாநிலமும் உள்ளது. அதற்கு சமூகநீதியின் தொட்டில் என்று பெயர். தமிழ்நாட்டில் பிறபிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் மக்கள்தொகை 69.10% . ஆனால், அங்கு அவர்களுக்கு சமூகநீதி வழங்கப்படுவதற்கு எந்த நடவடிக்கையும் இல்லை. அதற்காக மாநில அளவில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றால் அதற்கான அதிகாரம் தங்களுக்கு இல்லை என்று தட்டிக்கழிக்கிறது தமிழ்நாட்டை ஆட்சி செய்யும் சமூக அநீதி அரசு. மொத்தத்தில் தமிழ்நாட்டுக்குள் சமூகநீதியை நுழைய விட மறுக்கிறது திமுக அரசு.

தெலுங்கானாவில் 20 முதல் 25 நாட்களில் நடத்தி முடிக்கப்படும் சாதிவாரி மக்கள்தொகை கணகெடுப்பை தமிழ்நாட்டில் நடத்த முடியாதா? அதற்கான மனித வளம் தமிழ்நாட்டில் இல்லையா? அதற்கான நிதி தமிழ்நாட்டில் இல்லையா? எல்லாம் இருக்கிறது. ஆனால், ஆட்சியாளர்களுக்கு சமூகநீதி வழங்க வேண்டும் என்ற எண்ணம் மட்டும் தான் இல்லை.

தமிழ்நாட்டை தற்போது ஆளும் அரசால் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படாது; சமூகநீதி வழங்கப்படாது என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கு உணர்ந்திருக்கின்றனர். சமூகநீதிக்கு இந்த அளவுக்கு துரோகம் செய்யும் தமிழ்நாட்டின் அரசை சமூகநீதிக் காவலர் வி.பி.சிங்கின் ஆன்மா ஒருபோதும் மன்னிக்காது. அடுத்து அமையவிருக்கும் பாட்டாளி மக்கள் கட்சி அங்கம் வகிக்கும் ஆட்சியில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும்; அனைத்து மக்களுக்கும் முழுமையான சமூக நீதி வழங்கப்படும். இது உறுதி என்று தெரிவித்துள்ளார்.

# மழையால் ஏற்பட்ட ஈரப்பதம் அடுத்தடுத்து கீழே விழுந்த வாகன ஓட்டிகள்



சென்னை, நவ.29

சென்னை கொரட்டூர் ரெயில்வே சுரங்கப்பாதையில் வாகனங்கள் அடுத்தடுத்து விபத்தில் சிக்கியதால் பரபரப்பு ஏற்பட்டது.

இப்பகுதியில் பள்ளி மாணவர்கள், போலீசார் உட்பட பலர் வாகனங்களில் இருந்து தவறி விழுந்தனர்.

சுரங்கப்பாதையினுள் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ள நிலையில், மழையால் ஈரப்பதம் ஏற்பட்டுள்ளது. இதனால், சாலையில் பிடிப்பு இல்லாமல் வாகன ஓட்டிகள் அடுத்தடுத்து வழுக்கி விழுந்து விபத்தில் சிக்கி வருகின்றனர். தொடர்ந்து விபத்துகள் நிகழ்ந்து வருவதால், சாலையை உடனே சீரமைக்க வேண்டுமென வாகன ஓட்டிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

மழையின்போது சுரங்கப்பாதையில் செல்லும்போது கவனமாக இருங்கள். மெதுவாக செல்லுங்கள் என்றும் வாகன ஓட்டிகள் தெரிவித்தனர்.

# இடைவிடாத மழை: கொடைக்கானலில் மரங்கள், மின்கம்பங்கள் விழுந்து சேதம்



திண்டுக்கல், நவ.29

குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. திண்டுக்கல் மாவட்டத்துக்கு கன மழை எச்சரிக்கை விடுக்கப்படாத நிலையிலும் நேற்று மாலை முதலே இடைவிடாமல் சாரல் மழை பெய்து வருகிறது.

திண்டுக்கல் மட்டுமின்றி கொடைக்கானல், நத்தம், நிலக்கோட்டை, வேடசந்தூர், பழனி உள்ளிட்ட பகுதிகளிலும் தொடர் மழை நீடித்து வருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மழை காரணமாக கொடைக்கானல் தாலுகாவுக்கு உட்பட்ட பகுதியில் பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அறிவிக்கப்பட்டது.

தொடங்கிய மழை இன்று வரை தொடர்ந்து பெய்து வருகிறது. இதனால் பள்ளி முடிந்து வீட்டுக்கு திரும்பிய மாணவர்கள் நனைந்தபடியே சென்றனர்.

அதேபோல் இன்று காலையிலும் குடைபிடித்தபடியும், மழை கோட் அணிந்தபடியும் சிரமத்துடன் மாணவர்கள் பள்ளிக்கு சென்றனர். இதேபோல் அன்றாட பணிகளுக்கு செல்லும் தொழிலாளர்களும் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

கொடைக்கானலில் பெய்து வரும் தொடர் மழையால் அனைத்து சுற்றுலா தலங்களும் மக்கள் கூட்டமின்றி வெறிச்சோடி காணப்பட்டது.

கடந்த சில நாட்களாக பனியின் தாக்கம் நீடித்து வந்த நிலையில் தற்போது பனி மற்றும் மழையும் சேர்ந்து மக்களை வாட்டி எடுத்து வருகிறது.

சாலைகளில் எதிரில் வரும் வாகனங்கள் கூட தெரியாத அளவுக்கு பனி மூட்டம் காணப்படுகிறது. இதனால் மலைச்சாலைகளில் செல்லும் வாகனங்கள் ஊர்ந்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

கொடைக்கானல் கீழ் மலை பகுதியான பெரும்பாறை, தாண்டிக்குடி, மங்களம்கொம்பு, பண்ணைக்காடு, குப்பமாள்பட்டி, கே.சி.பட்டி, ஆடலூர், பன்றிமலை உள்ளிட்ட பகுதியில் நேற்று இரவு முதல் விடிய விடிய மழை பெய்து வருகிறது.

இதனால் ஆங்காங்கே மண்சரிவு மரக்கிளைகள் முறிந்து விழுந்தன. இதன் காரணமாக பல கிராமங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

இந்த நிலையில் இன்று அதிகாலை பெய்த கன மழை காரணத்தால் பெரும்பாறை அருகே உள்ள மூலக்கடைபுல்லாவெளி இடையே இஞ்சோடை என்ற இடத்தில் சாலையோரத்தில் இருந்த மின்கம்பம் அதிகாலை சுமார் 4 மணி அளவில் சாய்ந்து விழுந்தது. இதனால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

பின்னர் அப்பகுதி மக்கள் உதவியுடன் மின் கம்பத்தை அகற்றினர். சுமார் 3 மணி நேரத்திற்கு பின் போக்குவரத்து சீரானது. ஆனால் மீண்டும் மின்சாரம் வராததால் மக்கள் சிரமத்துக்கு ஆளாகினர்.

தொடர்ந்து மழை பெய்து வருவதால் இது போன்ற பாதிப்புகள் ஏற்படாமல் இருக்க வருவாய் மற்றும் பேரிடர் மீட்பு குழுவினர் தொடர் கண்காணிப்பை தீவிரபடுத்த வேண்டும் என மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

திண்டுக்கல் 7.40, காமாட்சிபுரம் 13.80, நத்தம் 6, நிலக்கோட்டை 6.20, சத்திரப்பட்டி 12.40, வேடசந்தூர் 11.20, புகையிலை ஆராய்ச்சி நிலையம் 11, பழனி 6, கொடைக்கானல் ரோஸ் கார்டன் 28.50, பிரையண்ட் பூங்கா 28 என மாவட்டத்தில் இன்று காலை வரை 130.50 மி.மீ மழை அளவு பதிவாகியுள்ளது.

# திருப்பூரில் பட்டா வழங்க கோரி பொதுமக்கள் நடுரோட்டில் அமர்ந்து தர்ணா



திருப்பூர், நவ.29

திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட 55வது வார்டு பட்டுக்கோட்டையார் நகர்வடக்கு பகுதியில் 192 குடும்பங்கள் 38 ஆண்டு காலமாக வசித்து வருகின்றனர். பல்வேறு பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, வீடு இல்லாமல் வாழ்விடத்திற்காக குடிபெயர்ந்தவர்கள் என ஏராளமானோர் இங்கு வந்து பல ஆண்டுகளாக வசித்து வருகின்றனர்.

இப்பகுதியில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்க வலியுறுத்தி கடந்த 38 ஆண்டு காலமாக அரசிடம் வலியுறுத்தப்பட்டு வருகிறது. பல கட்ட போராட்டத்திற்குப் பிறகு தி.மு.க., ஆட்சி அமைந்த உடன் பட்டா வழங்குவதற்கான ஆவணங்கள் தயார் செய்து அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தொடர்ந்து ஓராண்டுக்கு மேலாகியும் எந்தவித முன்னேற்றமும் இல்லாததால் தங்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என திருப்பூர்கலெக்டர்அலுவலகத்தில் இன்று காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட போவதாக பட்டுக்கோட்டையார் நகர் குடியிருப்போர் நல சங்கம் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

அதன்படி இன்று காலை திருப்பூர்கலெக்டர்அலுவலகம் நோக்கி செல்ல முயன்ற பட்டுக்கோட்டையார் நகர் பகுதி பொதுமக்கள் போலீசாரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். 50க்கும் மேற்பட்ட போலீசார் கலெக்டர் அலுவலகம் நோக்கி சென்ற பொதுமக்களை தடுத்து நிறுத்தியதால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் பட்டுக்கோட்டையார் நகர் பகுதியில் சாலையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து சம்பவ இடத்தில் திருப்பூர் தெற்கு தாசில்தார் மற்றும் போலீசார் பொதுமக்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# மாணவரின் புத்தகத்தில் சாதி பெயரை எழுதிய ஆசிரியர் பணியிடை நீக்கம்



திருப்பத்தூர், நவ.29

திருப்பத்தூர் அருகே குனிச்சி மோட்டூர் பகுதியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இங்கு 100க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் படித்து வருகின்றனர். இந்த பள்ளியில் பணியாற்றி வரும் ஆசிரியர் விஜயகுமார் புத்தகத்தில் உள்ள இசைக்கருவிகள் குறித்து பாடம் நடத்தி உள்ளார்.

அப்போது, குறிப்பிட்ட ஒரு இசைக்கருவியின் பெயரை குறிப்பிட்டு அந்த இசைக்கருவியை குறிப்பிட்ட சாதியை சேர்ந்தவர்கள் மட்டுமே வாசிப்பார்கள் எனக்கூறி ஒரு மாணவரின் பாடப்புத்தகத்தில், மாணவரின் சாதி பெயரை குறிப்பிட்டு எழுதி அனைத்து மாணவர்கள் முன்னிலையில் தரக்குறைவாக பேசியதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து அந்த மாணவன் வீட்டுக்கு சென்று பெற்றோரிடம் கூறி அழுதான். இதையடுத்து, 2 நாட்கள் கழித்து ஊர் பொதுமக்கள் பள்ளிக்கு சென்று ஆசிரியரிடம் இது தொடர்பாக கேட்டபோது, அவர் முறையான பதில் அளிக்கவில்லை எனக்கூறப்படுகிறது.

பின்னர் குனிச்சி மோட்டூர் பகுதியைச் சேர்ந்த கிராம மக்கள், விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் ஒன்றிணைந்து நேற்று காலை பள்ளியை முற்றுகையிட்டு திடீரென போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, மாணவரின் சாதி பெயரை புத்தகத்தில் எழுதிய ஆசிரியரை பணிநீக்கம் செய்து, கைது செய்ய வேண்டும் என கோஷமிட்டனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் புண்ணியகோட்டி, திருப்பத்தூர் தாசில்தார் நவநீதம், கந்திலி போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது ஆசிரியர் மீது உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் கூறினர்.

இந்நிலையில் இந்த விவகாரத்தில் ஆசிரியர் விஜயகுமாரை பணியிடை நீக்கம் செய்து மாவட்ட கல்வி அலுலவர் உத்தரவிட்டுள்ளார். விஜயகுமார் மீது வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

# வெள்ளி விழாவையொட்டி திருவள்ளுவர் சிலைக்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு

கன்னியாகுமரி, நவ.29

கன்னியாகுமரி கடல் நடுவில் அமைந்துள்ள விவேகானந்தர் பாறைக்கு அருகில் உள்ள மற்றொரு பாறையில் திருவள்ளுவருக்கு 133 அடி உயர சிலை எழுப்பப்பட்டுள்ளது. இந்த சிலை கடந்த 2000ம் ஆண்டு நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

இந்த சிலையின் முதலாம் ஆண்டு விழா அரசு சார்பில் கொண்டாடப்பட்டது. அதன்பிறகு இந்த சிலை நிறுவி 25 ஆண்டுகள் ஆவதையொட்டி வெள்ளி விழா கொண்டாட்டம் அரசு சார்பில் கன்னியாகுமரியில் வருகிற டிசம்பர் 31 மற்றும் ஜனவரி 1 ஆகிய 2 நாட்கள் கொண்டாடப்படுகிறது.

இந்த வெள்ளி விழாவையொட்டி கன்னியாகுமரி கடல் நடுவில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு பாறைக்கும் திருவள்ளுவர் சிலைக்கு இடையே ரூ.37 கோடி செலவில் அமைக்கப்பட்டு வரும் கண்ணாடி இழையிலான கூண்டு பாலமும் திறக்கப்படுகிறது.

மேலும் திருவள்ளுவர் சிலையில் ரூ.3 கோடி செலவில் லேசர் மின் விளக்கு வசதியும் செய்யப்பட்டு வருகிறது. இந்த வெள்ளி விழா கொண்டாட்டத்தில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார். இந்த விழாவில் பல்வேறு வளர்ச்சி திட்ட ப்பணிகளையும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இந்த திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவையொட்டி கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடக்கிறது. திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவையொட்டி கன்னியாகுமரியில் பல்வேறு ஏற்பாடுகள் நடந்து வருகிறது. அந்த அடிப்படையில் முதல் கட்டமாக ரூ.10 கோடி செலவில் கன்னியாகுமரி நகரை அழகுபடுத்தும்படி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இதற்கிடையில் கன்னியாகுமரி கடல் நடுவில் அமைந்துள்ள 133 அடி உயர சிலைக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மேலும் திருவள்ளுவர் சிலை இரவு பகலாக தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தினகனி



# தொடர் மழை: சதுரகிரி கோவிலுக்கு செல்ல பக்தர்களுக்கு தடை

விருதுநகர், நவ.29

விருதுநகர் மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பிரசித்தி பெற்ற சதுரகிரி சுந்தரமகாலிங்க சுவாமி கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலுக்கு மாதந்தோறும் அமாவாசை, பவுர்ணமி நாட்களில் பக்தர்கள் சென்று வழிபாடு நடத்த அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.



அந்த வகையில், கார்த்திகை மாத பிரதோஷம் மற்றும் அமாவாசையை முன்னிட்டு சதுரகிரிக்கு பக்தர்கள் மலையேறி சென்று சாமி தரிசனம் செய்ய இன்று (வியாழக்கிழமை) முதல் வருகிற 1ந் தேதி வரை அனுமதி வழங்கப்பட்டு இருந்தது.

இந்தநிலையில்மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதாலும், நீரோடைகளில் தண்ணீர் வரத்து உள்ளதாலும் பக்தர்களின் பாதுகாப்பு கருதி 4 நாட்கள் வழங்கப்பட்டு இருந்த அனுமதி ரத்து செய்யப்பட்டு இருப்பதாகவும், பக்தர்கள் மலை ஏற தடை விதிக்கப்பட்டு உள்ளதாகவும் வனத்துறை மற்றும் போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. எனவே பக்தர்கள் யாரும் தாணிப்பாறை அடிவாரப்பகுதிக்கு வர வேண்டாம் எனகோவில் நிர்வாகம் சார்பில் அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

# கள்ளக்குறிச்சியில் திருப்பதி தேவஸ்தானம் சார்பில் அன்னதான கூடம் பூமி பூஜையில் எடப்பாடி பழனிசாமி பங்கேற்பு

கள்ளக்குறிச்சி, நவ.29

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில், திருப்பதி தேவஸ்தானம் சார்பில் ஏழுமலையான் கோவில் கட்டுமான பணி 20 கோடி ரூபாய் மதிப்பில், 5 ஏக்கர் பரப்பளவில் நடைபெற்று வருகிறது. இதில் 2 கோடி ரூபாய் மதிப்பில், கோவில் அன்னதான கூடம் கட்டுவதற்கான பூமி பூஜையை நடைபெற்றது.




பட்டாச்சாரியார்கள் வேதமந்திரங்கள்முழங்க யாகம் நடைபெற்ற இந்த பூமி பூஜையில், அ.தி.முக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி கலந்துகொண்டு, பூமி பூஜை செய்து கட்டுமானபணியைதொடங்கி வைத்தார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளதாக குற்றம் சாட்டினார்.

# திருச்செந்தூரில் 2வது நாளாக கடல் உள்வாங்கியது

திருச்செந்தூர், நவ.29

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கும், அய்யா வைகுண்டர் அவதாரபதிக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில் ஒவ்வொரு மாதமும் வழக்கமாக அமாவாசை மற்றும் பவுர்ணமி நாட்கள், அதற்கு முன்தினம், மறுநாள் கடல்நீர் உள்வாங்குவது வழக்கமான நிகழ்வாக நடைபெற்று வருகிறது.



அதன்படி நாளை (சனிக்கிழமை) அமாவாசை வருகிறது. அது போல் தற்போது வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலமும் தீவிரமடைந்துள்ளது. இதன் காரணமாக திருச்செந்தூரில் கடல் நீர் உள்வாங்கி காணப்பட்டது. நேற்றும் 2வது நாளாக கடல்நீர் சுமார் 100 அடி தூரம் உள்வாங்கியது. இதனால் கடலில் பாசி படர்ந்த பாறைகள் வெளியே தெரிந்தன. ஆபத்தை உணராமல் பாறைகள் மேல் நின்று பக்தர்கள் செல்பி எடுத்தனர். கடல் உள்வாங்கிய பகுதிகளில் காவல்துறையினர் மற்றும் கோவில் கடற்கரை பாதுகாப்பு பணியினர் அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தனர். மேலும் கோவிலுக்கு வந்த பக்தர்கள் எந்த வித அச்சமும் இன்றி வழக்கம்போல் கடலில் புனித நீராடி சாமி தரிசனம் செய்தனர்.

# மாவீரம் போற்றுதும்... மாவீரம் போற்றுதும்: தவெக தலைவர் விஜய்

சென்னை, நவ.29

இலங்கையில் ஈழ விடுதலைக்கு பாடுபட்டு உயிர் நீத்தவர்களின் நினைவாக உலகம் முழுவதும் மாவீரர்கள் தினம் ஆண்டுதோறும் நவம்பர் 27ம் தேதி (இன்று) கடைபிடிக்கப்பட்டு வருகிறது.



கடந்த சில ஆண்டுகளாக இலங்கையில் மாவீரர் தினம் கடைபிடிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது. தற்போது இலங்கையில் புதிய அரசு அமைந்துள்ள நிலையில் மாவீரர் தினம் அனுசரிக்க தடையில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, உலகம் முழுவதும் இன்று மாவீரர் தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், மாவீரர் தினத்தையொட்டி தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் எக்ஸ் பக்கத்தில் பதிவு ஒன்றை பதிவிட்டுள்ளார். அதில், மாவீரம் போற்றுதும்... மாவீரம் போற்றுதும்' என பதிவிட்டுள்ளார்.

# திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக தேர்வுகள் ஒத்திவைப்பு

திருச்சி, நவ.29

வங்கக்கடலில் நிலவி வரும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று இரவு புயலாக வலுப்பெறும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்காலில் கனமழை பெய்து வருகிறது.




இந்நிலையில், கனமழை, புயல் எச்சரிக்கை காரணமாக திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் கல்லூரிகளில் நாளை நடைபெறவிருந்த தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக தேர்வுகள் இன்று ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் நாளையும் தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

# மாமல்லபுரம் அருகே கார் மோதி 5 பெண்கள் பலி

செங்கல்பட்டு, நவ.29

சென்னை அருகே செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் அருகே பண்டிதமேடு பகுதி உள்ளது. ஈ.சி.ஆர் சாலை அருகே இப்பகுதி அமைந்துள்ளது.




இந்நிலையில், ஈ.சி. ஆர். சாலையில் பண்டிதமேடு பகுதியில் இன்று மதியம் 5 பெண்கள் மாடு மேய்த்துக்கொண்டிருந்தனர். அப்போது, ஈ.சி. ஆர். சாலையில் அதிவேகமாக வந்த கார், சாலையோரம் அமர்ந்து மாடு மேய்த்துக்கொண்டிருந்த பெண்கள் மீது மோதியது.

இந்த கோர விபத்தில் 5 பெண்களும் தூக்கி வீசப்பட்டனர். இச்சம்பவத்தில் சம்பவ இடத்திலேயே 5 பெண்களும் உயிரிழந்தனர். விபத்தை ஏற்படுத்திய காரை சுற்றி வளைத்த அப்பகுதியை சேர்ந்தவர்கள் காரில் இருந்தநபர்களைபிடித்து சரமாரியாக தாக்கினர். இது குறித்து தகவலறிந்த திருப்போரூர் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து காரில் இருந்தவர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பூஜையுடன் தொடங்கும் சூர்யா 45 படப்பிடிப்பு பணிகள்




தென்னிந்திய திரையுலகில் முன்னணி நடிகராக இருப்பவர் சூர்யா. இவரது நடிப்பில் சிறுத்தை சிவா இயக்கத்தில் கடந்த 14ந் தேதி 'கங்குவா' படம் வெளியானது. இப்படம் கலவையான விமர்சனங்களை பெற்று வருகிறது. அதனை தொடர்ந்து கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் சூர்யா 44வது திரைப்படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படம் விரைவில் வெளியாக உள்ளது.

தற்போது ஆர்.ஜே. பாலாஜி இயக்கத்தில் தனது 45வது படத்தில் நடிக்க உள்ளார். இந்த படத்திற்கு தற்காலிகமாக 'சூர்யா 45' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த படத்தினை ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. ஏ.ஆர். ரகுமான் இசையமைக்க உள்ளார். இந்த படத்தில் கதாநாயகியாக திரிஷா நடிக்க உள்ளார். 19 வருடங்கள் இடைவெளிக்கு பிறகு சூர்யாதிரிஷா இணைந்து நடிக்கும் இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகமாகி உள்ளது. சமீபத்தில் இந்த படத்தின் போஸ்டர் வெளியாகி வைரலானது.

இந்த நிலையில், இப்படத்தின் முற்கட்ட படப்பிடிப்பு பணிகள் கோவையில் தொடங்க உள்ளது. அதற்காக படக்குழுவினர் இன்று மாசாணியம்மன் கோவிலில் வழிபாடு செய்துள்ளனர். அடுத்ததாக, முதற்கட்ட படப்பிடிப்பு பணிகள் தொடங்க உள்ளதாகவும், சுமார் 35 நாட்கள் படப்பிடிப்பு நடைபெற உள்ளதாகவும் கூறப்படுகிறது.

# ஆஸ்திரேலிய பிரதமரை சந்தித்த இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள்



ஆஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட பார்டர்கவாஸ்கர்கோப்பைடெஸ்ட்தொடரில்விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் போட்டியில் இந்தியா 295 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரில் 10 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையிலான 2வது டெஸ்ட் போட்டி வரும் டிசம்பர் 6ம் தேதி அடிலெய்டில் பகல் இரவு ஆட்டமாக தொடங்க உள்ளது.

இந்த நிலையில், ஆஸ்திரேலிய பிரதமர் ஆண்டனி அல்பானீஸை இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் இன்று சந்தித்தனர். ஆஸ்திரேலிய நாடாளுமன்ற வளாகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. சந்திப்பின்போது இந்திய அணி வீரர்களிடம் பிரதமர் ஆண்டனி அல்பானீஸ் சிறிது நேரம் உரையாடினார்.

# 'மாயன்' படத்திற்கு 'யு' சான்றிதழ் வழங்கிய தணிக்கை குழு




இயக்குனர் ராஜேஷ் கண்ணா எழுதி, இயக்கி இருக்கும் படம் "மாயன்". பேண்டஸி, திரில்லர் மற்றும் வரலாறு என மூன்று வித ஜானரில் நகரும் வகையில், இந்த படத்தின் கதை எழுதப்பட்டு இருக்கிறது. இந்திய திரையுலகில் உருவாக்கப்பட்டதிலேயே அதிக கிராபிக்ஸ் காட்சிகள் நிறைந்த திரைப்படமாக "மாயன்" உள்ளது. இந்த படத்தின் 50சதவீதத்திற்கும் அதிகமானகாட்சிகள்கிராபிக்ஸ் முறையில் உருவாக்கப்பட்டு உள்ளன.

ஜி.வி.கே.எம். எலிபன்ட் பிக்சர்ஸ், டாட்டோ கணேஷ் மோகன சுந்தரம் இந்த படத்தை இணைந்து தயாரித்துள்ளார். இந்த படத்தில் வினோத் மோகன் மற்றும் பிந்து மாதவி முன்னணி கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இவர்களுடன் ஆங்கில பதிப்பில் பிரியங்கா மோகன் சிறப்பு தோற்றத்தில் நடித்துள்ளார். இவர்கள் தவிர பியா பாஜ்பாய், ஜான் விஜய், ஆடுகளம் நரேன், சாய் தீனா, கஞ்சா கருப்பு, ராஜ சிம்மன், ஸ்ரீரஞ்சனி, ரஞ்சனா நாச்சியார் மற்றும் பலர் நடித்துள்ளனர். 2 பதிப்புகளாக மாயன் படத்தை உருவாக்கி இருக்கிறார்கள். முதல் பதிப்பை விட இரண்டாம் பதிப்பில் கூடுதல் கிராபிக்ஸ் காட்சிகள் உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சமீபத்தில் இந்த படத்தின் டிரெய்லர் வெளியாகி அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. இப்படம் வருகிற 29ந் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இந்த நிலையில் இப்படத்திற்கு தணிக்கை குழு 'யு' சான்றிதழ் வழங்கியுள்ளது.

# ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி எப்போதும் உலகத்தரம் வாய்ந்தது பில் சால்ட்

18வது ஐ.பி.எல். தொடருக்கான வீரர்களின் 2 நாள் மெகா ஏலம் சவுதி அரேபியாவின் ஜெட்டா நகரில் நடைபெற்றது. இதில் மொத்தம் 62 வெளிநாட்டவர் உள்பட 182 வீரர்கள் ரூ.639.15 கோடிக்கு விற்கப்பட்டனர்.

இதில் இங்கிலாந்து வீரரான பில் சால்ட்டை ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி ரூ. 11.50 கோடிக்கு வாங்கியது. கடந்த சீசனில் கோப்பையை வென்ற கொல்கத்தா அணியில் பில் சால்ட் இடம்பெற்றிருந்தார்.

இந்நிலையில் பெங்களூரு அணியின் நம்பிக்கை நட்சத்திரம் விராட் கோலி மீது தமக்கு மிகப்பெரிய மரியாதை இருப்பதாக பில் சால்ட் தெரிவித்துள்ளார். அத்துடன் ஐபிஎல் தொடரில் விளையாடாத காலங்களில் பெங்களூரு அணியின் ஆட்டத்தை இங்கிலாந்தில் தொலைக்காட்சியில் பார்த்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். மேலும் கோலி, கெயில், டீ வில்லியர்ஸ் போன்ற வீரர்களுடன் பெங்களூருவின் பேட்டிங் எப்போதும் உலகத்தரம் வாய்ந்ததாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் பேசியது பின்வருமாறு: "விராட் கோலி மீது எனக்கு அளவு கடந்த மரியாதை இருக்கிறது. அவருக்கு எதிராக விளையாடிய போதே அவருடன் பேசி சிரித்து நகைச்சுவைகளை பகிர்ந்து கொண்டேன். எனவே தற்போது அவருடன் விளையாடுவதற்காக நான் அவருடன் காத்திருக்கிறேன். களத்திற்கு சென்று அதிரடியாக விளையாட வேண்டும் என்ற தெளிவான வழியை பெங்களூரு அணி கொண்டுள்ளது. அவர்கள் எப்போதும் நெருப்பான குணமுள்ளவர்களை கொண்டுள்ளார்கள். அவர்களுடைய பேட்டிங் வரிசை எப்போதும் உலகத்தரம் வாய்ந்ததாக இருக்கும். சில வருடங்களுக்கு முன்பாகவே ஐபிஎல் தொடரை நான் பார்க்கும்போது அவர்கள் விளையாடுவதை தொலைக்காட்சியில் பார்ப்பேன். தற்போது அவர்கள் அணியில் ஆண்டி பிளவர் உள்ளிட்ட பயிற்சியாளர்கள் இருக்கிறார்கள். எனவே அவர்களுடைய தலைமையில் நான் விளையாடுவதற்காக காத்திருக்கிறேன். நாங்கள் ஒரே மாதிரியாக சிந்திக்கக் கூடியவர்கள் என்பது எனக்கு தெரியும்" என்று கூறினார்.

# தனுஷ் தொடர்ந்த வழக்கு நயன்தாரா, விக்னேஷ் சிவன் பதிலளிக்க ஐகோர்ட்டு உத்தரவு

நடிகை நயன்தாராவின் சிறுவயது வாழ்க்கை முதல் முன்னணி கதாநாயகியாக உயர்ந்தது வரை உள்ள சம்பவங்களை தொகுத்து 'நயன்தாரா: பியாண்ட் தி பேரி டேல்' என்ற தலைப்பில் ஆவணப்படம் ஒன்று உருவானது. இது கடந்த 18ம் தேதி நயன்தாராவின் பிறந்தநாளை முன்னிட்டு நெட்பிளிக்ஸ் ஓ.டி.டி தளத்தில் வெளியானது.

இதற்கு முன்பு வெளியான இதன் டிரெய்லரில், தனுஷ் தயாரிப்பில் நயன்தாரா நடிப்பில் வெளியான நானும் ரவுடிதான் திரைப்படத்தின் சிறு காட்சி இடம்பெற்றிருந்தது. அந்த வீடியோவுக்கு எதிராக நானும் ரவுடிதான் படத்தின் தயாரிப்பாளர் என்ற முறையில் நடிகர் தனுஷ் ரூ. 10 கோடி இழப்பீடு கேட்டு நயன்தாராவுக்கு வழக்கறிஞர் மூலம் நோட்டீஸ் அனுப்பி இருந்தார்.

இந்த சூழ்நிலையில் நயன்தாராவுக்கு எதிராக, வொண்டர் பார்ஸ் நிறுவனம் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்திருந்தது.நயன்தாராமற்றும்விக்னேஷ்சிவன்மீதுவழக்குதொடரஅனுமதிவழங்குமாறுஅதில்குறிப்பிடப்பட்டிருந்து. இந்த வழக்கு சென்னை ஐகோர்ட்டில் விசாரணைக்கு வந்தது.

அந்த விசாரணையில் நயன்தாரா மற்றும் விக்னேஷ் சிவன் மீது வழக்கு தொடர தனுஷின் வொண்டர்பார் தயாரிப்பு நிறுவனத்திற்கு ஐகோர்ட்டு அனுமதி வழங்கியுள்ளது. இந்த வழக்கு தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட நயன்தாரா மற்றும் விக்னேஷ் சிவன் ஆகியோர் இந்த வழக்கிற்கு பதிலளிக்க வேண்டும் சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

# மகளிர் கிரிக்கெட்: இந்தியாவுக்கு எதிரான தொடர் வெஸ்ட் இண்டீஸ் அணி அறிவிப்பு

வெஸ்ட் இண்டீஸ் மகளிர் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தலா 3 போட்டிகள் கொண்ட டி20 மற்றும் ஒருநாள் தொடர்களில் விளையாட உள்ளது. அதன்படி இவ்விரு அணிகளுக்கு இடையே முதலில் டி20 தொடரும், இதனையடுத்து ஒருநாள் தொடரும் நடைபெற உள்ளது. அதன்படி முதலாவது ஒருநாள் போட்டி வரும் டிசம்பர் 15ம் தேதி நடைபெற உள்ளது. இந்நிலையில் இந்திய சுற்றுப்பயணத்திற்கான வெஸ்ட் இண்டீஸ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஹீலி மேத்யூஸ் தலைமையிலான அந்த அணியில் ஸ்டாபானி டெய்லர் காயம் காரணமாக இடம்பெறவில்லை.

வெஸ்ட் இண்டீஸ் அணி விவரம் பின்வருமாறு: ஹீலி மேத்யூஸ் (கேப்டன்), ஷெமைன் காம்ப்பெல்லே (துணை கேப்டன்), ஆலியா அலீன், ஷாமிலியா கானல், நெரிசா கிராப்டன், டியாண்ட்ரா டோட்டின் அபி பிளெட்சர், ஷபிகா கஜ்னாபி, சினெல்லே ஹென்றி, ஜைடா ஜேம்ஸ், கியானா ஜோசப், மாண்டி மங்ரு, அஷ்மினி முனிசார், கரிஷ்மா ராம்ஹராக், ரஷாதா வில்லியம்ஸ்

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.